தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 25, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 8, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்."

ஒரு செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்வது எல்லோருக்கும் எளிதுதான். ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் என்பதுதான் மிகவும் கடினமான செயல் ஆகும்.

1. வினாக் –விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண்கள் 425, 426, 427 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 428, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

428—

வேளாண்மைக் கல்லூரி

24843—திரு. ஆர். ராமமூர்த்தி:***

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டியில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதி, கல்வியில், வேலைவாய்ப்பில், தொழிலில், தொழிற்சாலைகளில், வாழ்க்கைத் தரத்தில், தனிநபர் வருமானத்தில், இப்படி எல்லா வகைகளிலுமே பின்தங்கியிருக்கிற கிராமங்களையும், ஊர்களையும் மட்டுமே கொண்டுள்ள ஒரு தொகுதி. வெளிப்படையாகச் சொன்னால், என் தொகுதிக்கு மட்டுமே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனியாக விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்வார்களென்று சொன்னால், சாலப் பொருத்தமாக இருக்கும். ஆனால், அப்படிக் கேட்பது மிகப் பெரிய பேராசை என்ற காரணத்தால், குறைந்தபட்சம் ஒரு வேளாண்மைக் கல்லூரியையாவது அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டில் ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஒரு மகளிர் தோட்டக் கலைக் கல்லூரியும், குமுளூரில் ஒரு வேளாண் பொறியியல் கல்லூரியும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன. விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அருகில் இருக்கும் திருச்சி மாவட்டத்திலுள்ள மேற்சொன்ன கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். மேற்கண்ட வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த கல்லூரிகள்மூலம்*

2013 மே 8]

மாணவர்களுக்கு விவசாயம் தொடர்பான கல்வியும், விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த தொழில்நுட்ப விவரங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், திண்டிவனத்தில் இயங்கி வரும் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையமும், வேளாண் அறிவியல் நிலையமும் விக்கிரவாண்டி தொகுதி விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. விக்கிரவாண்டிக்கு அருகிலுள்ள சிதம்பரத்திலே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. விக்கிரவாண்டியிலிருந்து சுமார் 70, 75 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கும். எனவே, அங்கேயெல்லாம் விக்கிரவாண்டியிலுள்ள மாணவ, மாணவியர் சேர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். எனவே, விக்கிரவாண்டியில் புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அங்கு ஒரு வேளாண் கல்லூரி அமைக்க மீண்டும் பரிசீலிக்க ஏதாவது வாய்ப்பிருந்தால், செய்து கொடுங்கள் என்று வேண்டுகோள் வைப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்று சொல்லி, நன்றியோடு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: வாய்ப்பிருப்பின், நிதிநிலை சரியாக இருப்பின், செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், 100 ஏக்கர் விவசாய நிலம், நல்ல நிலம் தேவைப்படுகிறது. மேலும், தொடக்கத்திலேயே 50 கோடி ரூபாய் வரை செலவாகிறது. இதையெல்லாம் அனுசரித்து, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒளி மின்தகடுகள், சூரிய ஒளி சேகரிப்பான்கள் மற்றும் இதர புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான இயந்திரங்கள், கருவிகள், வீட்டு உபயோகச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் பொறியியல் தொழில்கள் அமையும் வகையில் சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

சங்கரன்கோவில் தொகுதியில் விவசாயத்தை மட்டுமே சார்ந்து வாழக்கூடிய மக்கள் வசிக்கின்றனர். இத்தொகுதியில் விவசாயப் பயிர் மற்றும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருகிறது. தண்ணீர்ப் பற்றாக்குறை அதிக அளவில் உள்ளதால், கிணற்றுப் பாசனத்தை மட்டுமே நம்பி, 1,600 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்கின்றனர். எனவே, தோட்டக்கலைப் பயிரையும், விவசாயத்தையும் நம்பியுள்ள மக்கள், அந்தத் தொழிலில் முன்னேறுவதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு மண்டல தோட்டக்கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தர ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு 11 அரசு வேளாண் கல்லூரிகளும், சார்புக் கல்லூரிகள் 6—ம், அரசு வேளாண்மை பட்டயப் படிப்புக் கல்லூரிகள் 8—ம், சார்பு பட்டயக் கல்லூரிகள் 5—ம், தோட்டக்கலைப் பட்டயப் படிப்புக் கல்லூரி ஒன்றுமாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குப் போதுமான இட*

2013 மே 8]

வசதியும் இருக்கிறது. மேலும், சிதம்பரம் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையிலே, 4,000 இருக்கைகள் இருக்கின்றன. அதனால் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இந்தக் கல்லூரியிலேயே நல்லமுறையிலே படிப்பதற்கான வசதியிருக்கிறது. இந்த ஆண்டுகூட அரசுக் கல்லூரிகளிலே மாணவர்கள் சேர்க்கை அதிகம் இருப்பின், 10 சதவிகித இருக்கைகள்கூட அதிகமாகப் பெறுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே, போதுமான இடங்கள் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலே கல்லூரி தொடங்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும்கூட, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 429, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

429—

நியாய விலைக் கடை

***22114—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், வெள்ளையூர் காலனி பகுதிக்குத் தனியாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியத்தில் உள்ள வெள்ளையூர் தொடக்க